# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ**
**முறையீட்டு மனு எண்.153/2017/பே.**

**ஆணை எண்.43 /2018/நாள். 05 –03–2018**

| | | |
|---|---|---|
| **12.07.2017ம் தேதிய தினமலர் நாளிதழ் செய்தி.** | -- | இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முறையீடாக பதிவு செய்தது |
| **செயல் அலுவலர், பொன்னேரி தேர்வு நிலை பேரூராட்சி திருவள்ளூர் மாவட்டம்.** | -- | எதிர் மனுதாரர் |

**ஆணை**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி பேரூராட்சியில் 2011–12ம் ஆண்டில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பொன்னேரி பேரூராட்சி பழைய பேருந்து நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள மீன் மற்றும் இறைச்சி விற்பனைக்காக 17 கடைகளுடன் கூடிய வணிக வளாகத்தில் 6 கடைகள் மட்டுமே பயன்பாட்டில் உள்ளன என்றும் மற்றவை ஆறு ஆண்டுகளாக பூட்டியே கிடப்பதால் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்பட்டுள்ளது எனவும் புகைப்படத்துடன் 12.07.2017ம் நாளிட்ட தினமலர் நாளிதழில் செய்திகள் வெளி வந்துள்ளன. இதனை 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 7(1)ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து முறையீடாக பதிவு செய்தது. இம்முறையீட்டிற்கு முறையீட்டு மனு எண் 153/2017 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டின் மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

இம்முறைமன்ற நடுவ 17.07.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்கண்ட முறையீட்டிற்கான உரிய விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பொன்னேரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பொன்னேரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 392/2017/நாள் 03.08.2017ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி பேரூராட்சியில் 2011-12ம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 17 எண்ணிக்கையிலான வணிக வளாக கடைகள் கட்டப்பட்டதாகவும், மேற்படி 17 கடைகளுக்கும் ஏலம் கோரப்பட்டதில் 12 கடைகள் மட்டுமே ஏலம் எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மீதமுள்ள 5 கடைகள் கடை எண். 5,9,10,11,12 க்கு ஏலம் எடுக்க எவரும் முன்வராத காரணத்தினை தொடர்ந்து மேற்படி கடைகளுக்கு 22.03.2013, 24.03.2015, 10.04.2015, 24.01.2016 07.06.2016, மற்றும் 04.04.2017 ஆகிய தேதிகளில் ஏலம் விடப்பட்டும் எவரும் ஏலம் எடுக்க முன்வரவில்லை என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் 16.08.2017 மற்று 28.09.2017 ஆகிய தேதிகளிலும் ஏலம் எடுக்க எவரும் முன்வராததால் ஏல நடவடிக்கைககள் முடிவாகவில்லை என தனது 15.11.2017 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். இக்கடைகளுக்கான மறு ஏலம் தேதி நிர்ணம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மேற்படி ஏலம் கோராத 5 கடைகளுக்கான ஏலத்தினை விரைவில் முடித்து பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படாவண்ணமும், தணிக்கைத் தடைகள் எழாவண்ணமும் இருக்க துறைத் தலைமைக்கு உரிய முன்மொழிவு அனுப்பி தேவையான தக்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொன்னேரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு வலியுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 05-ஆம் நாளன்று கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

-//உத்திரவின்படி - அனுப்பப்படுகிறது//-

சென்னை-600 032

பெறுநர்

செயல் அலுவலர்,
பொன்னேரி தேர்வு நிலை பேரூராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.

செயலாளர்.

6/3/18

நகல்

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர்.
2. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை - 108.

6/3/18